

நெல்லையில் சாகித்திய அகாதெமியும் பொதிகைத் தமிழ்ச்சங்கமும் இணைந்து தி.க.சி நூற்றாண்டுக் கருத்தரங்கை நடத்தின. கருத்தரங்கம் தொடர்பாக அமைக்கப்பட்டிருந்த பட கண்காட்சியை எழுத்தாளர்கள் வண்ணதாசன், சுகா, தாமோதரன், கவிஞர் பேரா ஆகியோர் பார்வையிட்டனர்.

### பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பில்

# தி.க.சிவசங்கரன் நூற்றாண்டுக் கருத்தரங்கம்!

## நெல்லையில் நடந்தது!!

நெல்லை,ஜூலை.27;

75 ஆண்டு காலம் தமிழ்ப் படைப்பிலக்கியத் துறையிலும் தமிழ்த் திறனாய்வுத்துறையிலும் தடம் பதித்த திருநெல்வேலி கணபதியப்பன் சிவசங்கரன் எனும் தி. க. சி நூற்றாண்டு விழாவை மதிதா இந்துக் கல்லூரி மேல்நிலைப் பள்ளியின் வ. உ. சி . அரங்கில் சாகித்ய அகாதெமியும் பொதிகைத் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தின.

பொதிகைத் தமிழ்ச் சங்க நிறுவுநர் கவிஞர் பே. ராஜேந்திரன் அறிமுக உரையாற்றினார்.

அவர் பேசுகையில்:" என்றைக்கு முதன் முதலாக ஒரு புத்தகம் எழுதப்பட்டதோ, உருவாக்கப்பட்டதோ அன்றுதான் குரங்கு நிலையிலிருந்து தன் நிலைக்கு உயர்ந்தான் மனிதன் குரங்கைத் தோற்கடித்தான் மனிதன்.

ஒரு குரங்கிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்தால் கிழித்துப் போடும். அவ்வளவு வெறுப்பைக் காட்டும் குரங்கு என ரஷ்ய அறிஞன் ஒரு கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

புத்தகமே மனிதனை மேலோங்கச் செய்யும் என்பதால்தான் பார்க்கிறவர்களையெல்லாம் புத்தகத்தை வாசிக்கச் சொன்னார்திகசி.

இன்றைக்கு இளைய தலைமுறையினரிடம் திகசியை கொண்டு செல்லும் நோக்கத்துடனேயே பொதிகைத் தமிழ்ச் சங்கம் இந்தநிகழ்வை சாகித்திய அகாதெமியுடன் இணைந்து நடத்துகிறது"

என கவிஞர் பே.இராஜேந்திரன் தெரிவித்தார் .

சாகித்ய அகாதெமியன் தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் தாமோதரன் என்ற அறவேந்தன் தலைமையுரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் எழுத்தாளர் சுகா,கவிஞர் முத்துக்குமார்,திருக்குறள் இரா. முருகன், வை. ராமசாமி,பிரபா,கவிஞர்கள் பாப்பாக்குடி செல்வமணி,சக்தி வேலாயுதம்,பிரபு உள்பட கல்லூரிமாணவமாணவிகள் ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.